**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**18**
**Defence**
**Court**

**Name** **:** மைதீன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 28.12.2022

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசி பன்பொழியில் குடியிருக்கிறேன். நான் தென்காசியில் குடியிருக்கவில்லை. நான் தென்காசியில் உள்ள இலஞ்சி செல்லும்சாலையில் உள்ள நடுபல்க்பக்கத்தில் டீக்கடையில் வேலை பார்த்து வந்தேன். அ.சா.17 என் உடன் பிறந்த சகோதரர். செய்யதுஅப்பா என் மற்றொரு சகோதரர் ஆவார். சாகுல்ஹமீதும், செய்யது அப்பாவும்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள
விசாரணை நீதிமன்றம், மதுரை.

பேசிக்கொள்வதில்லை. செய்யதுஅப்பாவுடன் நானும் பேசிக்கொள்வதில்லை. செய்யது அப்பாவின் மகன் அசன்கனி என்ற ராஜாவை தெரியும். அவர் எந்த அமைப்பில் இருந்தார் என்று தெரியாது- அவர் சிறைக்கு சென்று வந்தார் என்பது தெரியும். அசன்கனி எப்படி இறந்தார் என்றால் தகராறில் வெட்டுப்பட்டு இறந்துபோனதாக கேள்விப்பட்டேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. குமார் பாண்டியன் கொலை செய்யப்பட்ட விபரம் கேள்விப்பட்டேன். எனக்கும் என் அண்ணனுக்கும் 2004 ம் ஆண்டில் இருந்தே குடும்ப பிரச்சனை இருந்துவந்ததால் காவல் துறையில் புகார் கொடுதது பிரச்சனை இருந்துவந்தது. அதனால் அவர்கள் குடும்பத்தை பற்றி நான் அதிகம் அக்கறை கொள்வதில்லை. அசன்கனி எந்த அமைப்பில் இருந்தார் என்ன செய்துவந்தார் என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்று என் அண்ணன் மகன் அசன்கனி இறந்ததை பார்த்தேன். வேறுசிலரும் இறந்ததாக கேள்விப்பட்டேன். அசன்கனியின் பிரேதத்தை ஆய்வாளருக்கு நான் அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள
விசாரணை நீதிமன்றம், மதுரை.